# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105/1, Fifth Lane, Colombo 3, Sri Lanka
**Tel:** 011 5621886, 011 5621904,011 2564404 **Fax:** 011 4722632
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

## ஊடக அறிக்கை – 3

2008 ஆகஸ்ட் 21

நடைபெற இருக்கின்ற வடமத்திய மற்றும் சபரகமுவ மாகாணசபை தேர்தல்கள் தொடர்பான 218 வன்முறைச் சம்பவங்கள் 2008.8.20 அன்று வரை சி.எம்.ஈ.வி க்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றுள் 104 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகும்,114 பாரதூரமற்ற சிறு சம்பவங்களாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. வடமத்திய மாகாணத்தில் இருந்து 118 சம்பவங்களும் சபரகமுப மாகாணத்திலிருந்து 100 சம்பவங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்தில் இருந்து பதியப்பட்ட 118 சம்பவங்களுள் 86 சம்பவங்கள் அநுராதபுர மாவட்டத்தில் இருந்து பதிவுசெய்யப்பட்டுள்ளன. 32 சம்பவங்கள் பொலொன்னறுவை மாவட்டத்தில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

சபரகமுவ மாகாணத்தில் இருந்து 100 வன்முறைச் சம்பவங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் 56 சம்பவங்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்தும் 44 சம்பவங்கள் கேகாலை மாவட்டத்தில் இருந்தும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுர மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பட்டுள்ள 86 சம்பவங்களுள் 37 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை 49 சம்பவங்கள் சிறிய வன்முறைச் சம்பவங்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளன. பொலொன்னறுவை மாவட்டத்தில் இருந்து அறிவிக்கப் பட்டுள்ள 32 சம்பவங்களுள் 18 சம்பவங்கள் பாரியவன்முறைச் சம்பவங் களாகவும் 14 சம்பவங்கள் சிறிய வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப் படுத்தப்பட்டுள்ளன. இரத்தினபுரி மாவட் டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள 56

**TOTAL NUMBER OF INCEDENTS BY TYPE (218)**




INCIDENTS BY DISTRICT




**TOTAL NUMBER OF INCIDENTS BY DISTRICT**




POLONNARUWA




ANURADAPURA




RATNAPURA




KEGALLE

சம்பவங்களுள் 27 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகவும் 29 சிறு வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கேகாலை மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள 44 சம்பவங்களுள் 22 சம்பவங்கள் பாரிய வன்முறைச் சம்பவங்களாகவும் 22 சம்பவங்கள் சிறு வன்முறைச் சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள மொத்த 218 வன்முறைச் சம்பவங்களுள் ஐ.ம.சு.முன்னனிக்கு எதிராக 115 சம்பவங்களும் ஐ.தே.கட்சிக்கு எதிராக 35 சம்பவங்களும் ம.வி.முன்னனிக்கு எதிராக 4 சம்பவங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை ஒரு சம்பவம் தேசிய கொங்கரஸ் கட்சிக்கு எதிராகவும் பொலிஸாருக்கு எதிராக 2 சம்பவங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. 61 சம்பவங்களில் குற்றத்தை மேற்கொண்ட கட்சி அடையாளம் காணப்படவில்லை.

அநுராதபுர மாவட்டத்தில் ஐ.ம.சு.கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 34 முறைபாடுகளில் 4 முறைப்பாடுகளில் பேர்டி பிரேமலால் திசாநாயக (பிரதான வேட்பாளர் ஐ.ம.சு.க) அவர்களின் ஆதரவாளர்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதேவேளை எஸ்.எம். ரஞ்சித் (வேட்பாளர் ஐ.ம.சு.க) அவர்களின் ஆதரவாளர்கள் ஒரு சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். பொலொன்னறுவை மாவட்டத்தில் ஐ.ம.சு.கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 18 முறைப்பாடுகளுள் எஸ்.எம். ஜயன்த, ஆதம் லெப்பை பாயிஸ் மற்றும் டி.எஸ். தயாவன்ச ஆகிய ஐ.ம.சு.முன்னனியின் ஆதரவாளர்களுக்கு எதிராக தலா ஒவ்வொரு முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே மாவட்டத்தில் ஐ.தே.கட்சி எதிராக மேற்கொள்ளப்பட்ட 7 முறைப்பாடுகளில் ஒரு முறைப்பாட்டில் அநுர சிட்னி ஜயரத்ன (ஐ.தே.க. வேட்பாளர்) நேரடியாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐ.ம.சு.முன்னனிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 30 முறைபாடுகளில் பிரேமலால் ஜயசேகர (வேட்பாளர் ஐ.ம.சு.மு) அவர்களின் ஆதரவாளர்கள் 4 முறைப்பாடுகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதேவேளை காஞ்சன ஜயரத்ன (ஐ.தே.க. வேட்பாளர்) அவர்களின் ஆதரவாளர்கள் 3 முறைப்பாடுகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். பிரேமலால் ஜயசேகர நேரடியாக ஒரு சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். அதே மாவட்டத்தில் இருந்து ஐ.தே. கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 11 முறைப்பாடுகளில் ஹசித சமன்த (ஐ.தே.க. வேட்பாளர்) அவர்களின் ஆதரவாளர்கள் ஒரு சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. க்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 33 முறைபாடுகளில் மஹிபால ஹேரத் (பிரதான வேட்பாளர் ஐ.ம.சு.மு) அவர்களின் ஆதரவாளருக்கு எதிராக 7 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை அதேகட்சியை சேர்ந்த இம்டியாஸ் காதர் அவர்களின் ஆதரவாளர்கள் 3 முறைப்பாடுகளிலும் சமன் ஜயசிங்க அவர்களின் ஆதரவாளர்கள் 2 சம்பவங்களிலும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.




இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளில் ஐ.ம.சு.முன்னனிக்கு எதிராக ஐ.ம.சு முன்னனியே 3 முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ள அதேவேளை அக்கட்சிக்கு எதிராக ஐ.தே.க. 46 முறைப்பாடுகளையும் ம.வி.மு. 52 முறைபாடுகளையும் ருஹுனு மக்கள் கட்சி 4 முறைப்பாடுகளையும் தொழிலாளர் காங்கிரஸ் 2 முறைப்பாடுகளையும் பொலிஸ் 1 முறைப்பாட்டையும் சி.எம்.ஈ.வி 5 முறைப்பாடுகளையும் கட்சி அறியப்படாத நபர்கள் அல்லது குழுக்கள் 2 முறைபாடுகளையும் மேற்கொண்டுள்ளன. ஐ.தே.கட்சிக்கு எதிராக ஐ.ம.சு.முன்னனி 30 முறைபாடுகளை மேற்கொண்டுள்ளது. அதேகட்சிக்கு எதிராக ம.வி.மு. 4 முறைபாடுகளையும் தொழிலாளர் காங்கிரஸ் 1 முறைபாட்டையும் மேற்கொண்டுள்ளன. ம.வி.முன்னனிக்கு எதிராக ஐ.ம.சு.முன்னனி 4 முறைபாடுகளை மேற்கொண்டுள்ளது.

மேலும் 3பிரதான அரசியல் கட்சிகளான ஐ.ம.சு.மு, ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. மேற்கொண்டுள்ள பாரிய வன்முறைச் சம்பவங்களின் வகைப்படுத்தல் பின்வருமாறு அமைந்துள்ளது.

| Incidents Parties | Attempted murder | Grievous hurt | Hurt | Assault | Threat & intimidation | Misuse of State Resources | Robbery | Arson | Abduction |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| UPFA | | 1 | 3 | 12 | 5 | | 3 | 1 | |
| UNP | 1 | | 6 | 12 | 6 | | 3 | 1 | 1 |
| JVP | 1 | | 1 | 12 | 9 | 2 | 3 | 1 | |

**ஆயுதப்பிரயோகம்**

அறிவிக்கப்பட்டுள்ள மொத்த சம்பவங்களுள் 16 முறைப்பாடுகளில் ஆயுதப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது மொத்தசம்பவங்களில் 10.5%மான சம்பவங்களின் போது ஆயுதப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சதவீதமானது குறிப்பிடத்தக்களவு ஆயுதப்பிரயோகம் கையாளப்படும் நிலைமையை சுட்டிக்காட்ட போதுமானது என்று சி.எம்.ஈ.வி கருதுகிறது. இது தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள முறைபாடுகளில் ஐ.ம.சு.முன்னிக்கெதிராக 8 முறைப்பாடுகளும் ஐ.தே.கட்சிக்கெதிராக 2 முறைபாடுகளும் அறியப்படாத கட்சிகளுக்கெதிராக 8 முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்**

சி.எம்.ஈ.வி க்கு அறிவிக்கப்பட்டுள்ள 218 சம்பவங்களுள் அரச சொத்துக்கள் / வளங்கல் துஷ்பிரயோகம் தொடர்பாக (மாகாணசபைக்கு சொந்தமான வாகனங்கள் அநுராதபுரம் முதலமைச்சர் காரியாலயம் மற்றும் வளங்கள்) 8 முறைபாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களும் ஐ.ம.சு.மு எதிராகவே மேற்கொள்ளப்பட்டள்ளன.

**தற்காலிக ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவண விநியோகம்**

தேர்தலின் பொழுது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் ஆணையாளர் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடைமுறைகள் கள்ள வாக்களிப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வரவேற்கத்தக்க ஒரு முயற்சியாக சி.எம்.ஈ.வி கருதுகின்றது. என்றாலும் எதிர்வரும் தேர்தலில் வாக்காளர்கள் அனைவருக்கும் தேர்தலுக்கு முன்னர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள் 100% மான வெற்றியை தரவில்லை என சி.எம்.ஈ.விற்கு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட வகையில் அநுராதபுரத்தில் ஹொரவபதான மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தில் வெளிக்கந்தை ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட அவதானிப்புகளினூடாக கீழ்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

வெளிகந்தை மொனரத்தென்னை ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட தேடல்களின் போது குறிப்பிடத்தக்க அளவு வாக்காளர்களுக்கு வாக்காளரட்டை மற்றும் ஆளடையாள அட்டை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என தெரியவந்துள்ளது. அத்துடன் சில வேட்பாளர்கள் தமது தனிப்பட்ட செலவில் வாக்காளர்களுக்கு புகைப்படங்களை எடுக்க உதவுவதாகவும் எமக்கு தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பொலொன்னறுவை உதவி தேர்தல் ஆணையாளர் W.H.R. விஜயகுமார அவர்களை தொடர்பு கொண்ட பொழுது தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைபடி தற்காலிகமாக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களை வழங்குவதற்காக செயற்திட்டமொன்றை பொலொன்னறுவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தியதாகவும் அத்திட்டத்தினூடாக 8000 பெயர்வரை தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். அச் செயற்திட்டமானது 2008.8.20 வரை நடைமுறைப்படுத்தப்பட்டதென்றும் மேலும் கூறினார். என்றாலும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் இன்றி எத்தனைப்பேர் இருக்கின்றனர் என்பது தொடர்பாக கணக்கீடு எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

**பொலிஸாரின் பக்கச்சார்பு**

தேர்தலுக்கு முன்னரான பிரச்சார காலப்பிரிவில் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதிலும் சுதந்திரமானதும் நீதியுமான தேர்தல் ஒன்றை உறுதிசெய்வதிலும் பொலிஸாரின் செயற்பாடு பாரிய தாக்கத்தை செலுத்தும் ஒரு காரணியாக காணப்படுகிறது.

குறிப்பாக அநுராதபுர மாவட்டத்தில் இக்காரணி பாரிய தாக்கத்தை செலுத்துகின்றது. 2008.8.13 பிரதான மாவட்ட நீதிபதி ருசிர வெளிவத்த அவர்களின் அறிக்கையின்படி நகரில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் பொலிஸாரின் செயற்பாடின்மை ஆகும். இக்கருத்தை 8ம் திகதி காலை அநுராதபுர பொதுமக்கள் சந்தைக்கு அருகில் அரசியல் குண்டர் குழுவொன்றினால் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு ஆதரவாளர் ஒருவரை காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றத்திற்கு மேலதிக விபரங்களை வழங்கியபோதே மேற்கூறிய கூற்றை குறிப்பிட்டார்.

தவிர இந்நிலைமை பொலொன்னறுவை மாவட்டத்தின் பொலொன்னறுவை தேர்தல் தொகுதியிலும் கேகாலை மாவட்டத்தின், றம்புக்கனை, கேகாலை ஆகிய தேர்தல் தொகுதிகளிலும் தாக்கம் செலத்தும் காரணியாக காணப்படுகின்ற அதேவேளை சில அரசியல் கட்சிகள் இதுதொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எழுத்துமூலம் அறியப்படுத்தியுள்ளன.

**தேர்தல் பிரசாரகால அவதானிப்புகள்**

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பாக பிரசாரகால வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலைமையில்

1. பிரதான இரு அரசியல் கட்சிகளான ஐ.ம.சு.மு. மற்றும் ஐ.தே.க. ஆகிய கட்சிகள் தேர்தல் சட்டதிட்டங்களை கடைபிடியாமை.

2. தேர்தல் நடைபெறவுள்ள இரு மாகாணங்களில் சில பிரதேசங்களில் காணப்படுகின்ற பொலிஸாரின் பக்கச் சார்பு.

3. அநுராதபுர மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. பிரதான வேட்பாளர் பதவிக்கு விருப்பு வாக்கு பெறுவதில் காணப்படுகின்ற போட்டிநிலைமை.

4. பொலொன்னறுவை மாவட்டத்தில் பொலொன்னறுவை பிரதேசத்தில் T.M.V.P கட்சியினரின் செயற்பாடுகள்.

5. பொலொன்னறுவை பிரதேசத்தில் ஐ.ம.சு.மு. கட்சியினால் ம.வி.முன்னனிக்கெதிராக மேற்கொள்ளப்படும் அழுத்தம்.

6. கேகாலை மாவட்டத்தில் றம்புக்கண, கேகாலை, மாவனெல்லை ஆகிய பிரதேசங்களில் முன்னால் முதலமைச்சர் மஹிபால ஹேரத் அவர்களின் ஆதரவாளர்களின் வன்முறை போக்கு.

ஏ ன்பன தேர்தல் பிரச்சாரகால வன்முறைகளுக்கு பிரதான காரணங்களாக காணப்படுகிறது என சி.எம்.ஈ.வி. கருதுகிறது.